# C. C. A. MISSION AND DIALOGUE PARLEY IN COLOMBO

**The** Mission and Evangelism Desk of Christian Conference of Asia, will be conducting its programme on Dialogue at Berjaya Mount Royal Beach Hotel, Mount Lavina from 23rd - 29th February 2000.

Well known Theologians and Church leaders will address this Conference where Revds: V. Rajkumar, Jude Sutharshan and Daisy Aseervatham of our Diocese will participate

Rev. (Dr) D. S. Thiyagarajah is the organizer of this Conference.


# THE MORNING STAR

Registered as a Newspaper (Established 1841) published Every Friday

Vol 160 Jaffna Friday 11th, Febrnuary 2000 No. 03

*RICHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE*


## SEVAK CONSECRATED

Sevaka Apedchakan Phillip Kumar (Phillip Annai) was consecrated Sevak on Tuesday the 26th January at a special Service at the Ashram which began at 3. 00 p m. Bishop Jebanesan laid his hands on the Sevak Apedchakan and put on the saffron girdle on his waist

The service was led by Rev N S. P. Nesakumar. Chairman of the Ashram Board. Rev S. Karunasekera preached the sermon. Rev D. R. Ampalavanar gave a tribute to the life and witness of Sevak Sam Alfred who died on 26-1-1999

## PONNIAH JOSEPH THAMBIRATNAM

(Continuation from Last Issue)

He went to Australia and stayed with their sons, but returned soon to rejoin their daughters While living in Colombo, Mrs Thambiratnam passed away This created a void, and disturbed the even tenor of Mr Thambiratnam's life in a big way. All of the adversaries that came his way he was able to face with manly courage and unsullied calmness. It looked to me that he had developed the capacity to look upon the opposites, the good and the bad, pleasure and pain, with equal detachment. But his faith was deeply rooted in the Lord.

Mr Thambiratnam was a gentleman to his very finger tips. He was generally quiet by nature and was gifted with most amiable of manners. He was very knowledgeable, a man of culture and deep religious faith. This was his firm conviction: For in Him we live, move and have our being".

Whenever I met him in Colombo during his retirement, we used to discuss matters of literary. cultural or religious interest. In his inter - Arts class at Janna College he had the chance of studying the Tamil epic Chilappathikaram for which he seemed to have developed a great liking. There were occasions when he quoted to me from memory chunks of that great epic. With regard to the strange controversy going on amongst correspondents of the press of today as to whether there is a God or not Mr Thambiratnam quoted from the Bible wisdom "the fool hath said in his heart "There is no God" At times he used to lead me up the ennobling spiritual heights of the Holy Bible, much to my edification.

Soon after his retirement from Government service he served as Finance manager of St Thomas College, Mt Lavinia. But his life's contribution neared around the church. He was a pioneer and a founder member of the C S I Colombo Church and he continued to be a committee member of the church for many years: His contributions during the period of fifty years of membership were many. He also severd as manager of the Colombo Church Hostel. He did not

(Contd to Page 4)

## Foundation Laid

On the 26th January foundation stone was laid for the contruction of Sevak Sam Alfred memorial hostel at the Ashram premises.

## Wedding



The marriage of Mr. Jeevakumaran. son of Mr. & Mrs. M E Jeevagandhi of Erlalai South, to Miss Eveline Suganthini. daughter of Mr. & Mrs. P. E. Thanarajasingam of Pandatherippu, took place on Monday the 10th of January 2000 at 5 00 p. M. at the C S I Church. Wellawatte. The Wedding was solemnized by Rev. P. R. Navendranuguoolan and Homily was preached by the Rev Ebanezer Joseph of the National Christian Council of Sri Lanka.

The Service of Blessing of the marriage of Mr. Robert Sureshkumar son of Mr. & Mrs. S. K. Jesuthason of Navaly to Christine Dhrashani Packiam took place on Wednesday the 26th January 2000at the C S I Church, Wellawatte at 5 00 p m. The Homily was preached by the T. Jeyachandran Parish Priest, Vavuniya.

The marriage of Rev. Enoch Pooranamabiban Punitharajah, son of late E. N. Punitharajah and Mrs. Punitharajah to Evangaline Dulxine, daughter of late Mano Spencer, and Mrs. Spencer of Uduvil took place at C S I Church Wellawatte on Wednesday the 29th of December 1999. The Homily was preached by Rev. Dr. D. S. Thiyagarajah.

## Man Hit by shell Dies in Hospital

Mr. Kandiah Gunasegaram (45) died at teaching hospital Jaffna. He was injured by artillary shell at Ariyalai on Sunday the 25th January.

## 1500 Coconut trees Cut Down

During the second week of January more than 1500 coconut trees were cut down in the villages in east Jaffna. The stems were cut to pieces by machines and removed to various places in tractors.

Vide Uthayan (25-1-2000)

## A Maternity Ward at Chankanai

A maternity ward constructed at a cost of four million Rupees at Chankanai Rural hospital was declared open by Dr. (Miss) U. Sivapathasundram deputy Director health services Jaffna on Wednesdey the 19th January. The maternity ward has 14 beds.

## Aeriel Bombardment

Kfir planes bombarded the villages of Thanankilappu and Aruguveli on Sunday the 23rd January.

(Vide Uthayan 24-01-2000)

## BISHOP's VISIT to Nainativu & Delft

Bishop S. Jebanesan and Project Director Mr. V. Mithiraranjan will be visiting the Day Care Centres and Vocational Training Centres of Nainativu and Delft on the 15th 16th and 17th of February.

## New - Asst Pastor Colombo

Bro. T. Daniel Ranjith Worker - in - Charge Usan has been transferred to Colombo as Assistant Pastor.

Bro. A. Soundararajah who is now serving in Colombo will assume duties as worker in charge Usan. This tranfer will come into effect on 1-5-2000

# உங்கள் மிஷனரிமாரை அறிந்து கொள்ளுங்கள்



# ஸ்போல்டிங் தம்பதியினர்

**************************

**S. J.**

யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்கன் மிஷன் திருச்சபைகளிலே தனிச்சிறப்புப் பெற்று விளங்குவது உடுவிலாகும். இங்குதான் பெருந்தொகையான கல்விமான்களும், பரம்பரையாகப் புலமை மரபைக் கொண்டவர்களும் கிறிஸ்துவின் அடியவர்களாகினர். திருச்சபை வந்தேறு குடிகளின் அமைப்பாக வன்றி உள்ளூர்ப் பெருங்குடி மக்களின் திருச்சபையாயிற்று இன்று இப்பரம்பரையினர் பெரும்பாலும் புலம் பெயர்ந்து விட்டனரெனினும் உடுவில் திருச்சபையின் தோற்றம் பரந்த ஆராய்ச்சிப் பரப்புடையது. இத்திருச்சபையைக் கட்டியெழுப்பிய பெருமை 1820 ம் ஆண்டு உடுவிலில் பணியாற்றத் தொடங்கிய ஸ்போல்டிங் தம்பதியினரையும் வின்சிலோ தம்பதியினரையுமே சாரும்.

## அமெரிக்காவிலிருந்து அன்பு வெள்ளம்

ஸ்போல்டிங் அமெரிக்க இலங்கை மிஷனின் இரண்டாவது அணியைச்சேர்ந்தவர். இவர்கள் 18 - 06 - 1819 ஆண்டு பொஸ்ரன் துறைமுகத்திலிருந்து "இந்தஸ்" என்னும் கப்பல் மூலம் 162 நாட்கள் பிரயாணம் செய்த பின்னர் கல்கத்தா துறைமுகத்தை வந்தடைந்தனர்.

## "விசா" மறுப்பு

பத்தொன்பகாம் நூற்றாண்டில் கடவுச்சீட்டு, விசா என்பன கேள்விப்பாடாத காலம். எனினும் இலங்கையிலே இவர் பணியாற்ற அனுமதி மறுக்கப்பட்டது. பிரிட்டிஷாரின் துணைத்தேசாதிபதியாக விருந்த எட்வேட் பார்ண்ஸ் அமெரிக்கரை நஞ்சென வெறுத்தார். நெப்போலிய யுத்தத்தில் வெலிங்டன் பிரபுவுக்கு துணைத்தளபதியாக நின்று போராடியயவர் பார்ண்ஸ். அமெரிக்காபிரான்சிற்குச் சார்பாய் நின்றதனை மறந்து விட வில்லை. அமெரிக்கருக்கு பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டில் என்ன வேலை யென்று குமுறினார்; பிரதான தேசாதிபதியின் தலையீட்டிலேதான் அவர்கள் பணியாற்ற அனுமதிக்கப்பட்டனர். ஆனால் சிறிது காலத்தில் பார்ண்ஸ் தேசாதிபதியாகி அமெரிக்க மிஷனரிமாருக்கு பெருந்தொல்லைகளைக் கொடுத்தார்: 1833 ல் அவர் ஒய்வு பெறும் வரை அமெரிக்க மிஷனரிமாரின் வருகைக்குத் தடைவிதிக்கப்பட்டது.

## உடுவிலில் பணி

ஸ்போல்டிங் தம்பதியினரும் வின்சிலோ தம்பதியினரோடு உடுவிலிற் பணியாற்ற நியமிக்கப்டனர். 1820 ம் ஆண்டு ஆரம்பித்த உடுவில் மிஷன்பணி 1873ம் ஆண்டு வீவைஸ்போல்டிங் மரிக்கும் வரை நீடித்தது. இவ்வளவு நீண்ட காலம் வேறெந்த மிஷனரியும் யாழ்ப்பாணத்திற் பணியாற்றவில்லை யெனலாம்.

## கல்விமான்

1791 ம் ஆண்டு பிறந்த லீவை ஸ்போல்டிங் கோர்ணல் பல்கலைக் கழகத்தில் கற்று அதன் M.A பரீட்சையில் முதலாவது இடத்தைப் பெற்றவர். சமயம், மொழி, இலக்கியம். வரலாறு, இசை, என்பனவற்றில் ஆழ்ந்த புலமையுடையவர். உடுவிலிற் பணியாற்றத் தொடங்கியவுடன் தமிழ் மொழியை ஐயந்திரிபறக்கற்றார். வேதாகம மொழிபெயர்ப்பு, அகராதி ஆக்கம், துண்டுப் பிரசுர வேலை என்பன வற்றில் அவர் ஊக்கமாய் ஈடுபட்டார் 1850ல் வெளிவந்த நவலர் மொழி பெயர்ப்பு அல்லது பரீட்சை மொழி பெயர்ப்பு என்ற தமிழ் வேதாகமத்தில் இவர் பெருமளவு பங்களிப்புச் செய்துள்ளார். அகராதியாக்கம் இவருடைய கனிச்சிறப்பு 1842 ல் தமிழ் - தமிழ் அகராதி இவருடைய கடும் உழைப்பினால் வெளிவந்தது. 1852 ல் ஆங்கிலம் தமிழ் அகராதி இரண்டாம் பதிப்பினை [illegible] ஆர்னல்ட்கோடு அச்சுவாகனம் ஏற்றினார். இதற்கு அவர் கொடுத்த பெயர் "தமிழும் இங்கிலேசுமாயிருக்கிற அகராதி" என்பதாகும். தமிழ் உரை விருத்தியடையாத காலத்தில் மிஷனரிமார் எவ்வாறு தமிழில் எழுத முற்பட்டனர் என்பதற்கு இது உதாரணமாகும். கிறிஸ்தவ கம்பர் எச் ஏ கிருஷ்ணபிள்ளை அவர்களை இரட்சண்ணிய யாத்திரிகம் எழுதத் தூண்டியது. இவரின் பாதேசியின் மோட்ச பிரயாணம் என்ற மொழி பெயர்ப்பே என்பது மனங்கொள்ள வேண்டியதாகும். இலங்கையில் பணியாற்றிய மிஷனரிமாரின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ் ஏட்டுச் சுவடிகளின் அட்டவணை ஒன்றினையும் தயாரித்து வெளியிட்டார். இது இலக்கிய ஆர்வலகளுக்கு நல்விருந்து. 1823ம் ஆண்டு வட்டுக்கோட்டைச் செமினரி என்னும் மாபெரும் கலைக்கோவில் உருவாகியது. இக் கல்லூரி அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய மகஜரில் கைமொப்பமிட்டவர்களில் லீவை ஸ்போட்டிங் அவர்களும் ஒருவர். ஸ்போல்டிங் பீஷ்மரைப் போல நீண்டகாலம் உயிர் வாழ்ந்து 1873 ல் யாழ்ப்பாணக்கல்லூரி உதயமான போது அதன் தொடக்கவிழாவில் ஜெபம் செய்து கல்லூரி முயற்சியை ஆசீர்வதித்தார். 1855 ல் செமினரி மூடப்படுவதனைக் கடுமையாக எதிர்த்தவர்களில் ஸ்போல்டிங்கும் ஒருவர்.

## மேரி ஸ்போல்டிங்

உடுவிலில் சென்ற நூற்றாண்டில் 54 வருடங்கள் வாழ்ந்த அமெரிக்க மாது இவருடைய துணைவியார் மேரி ஸ்போல்டிங். இந்தப் புண்ணியவதியின் அன்பும் பக்தியும் பரோபகார உணர்ச்சியும் 19 ம் நூற்றாண்டு மிஷனரிமாரின் பண்புக்கு இலக்கணமாக விருந்தன.

வட்டுக்கோட்டைச் செமினரியின் அதிபர் ஹேஸ்டிங்ஸின் மகள் நான்சி பின்வருமாறு எழுதியுள்ளார்.

"I delighted to sit in Aunty. Spaulding 's lap and hear her tell stories about once there was a little boy or once there was a little girl"

## மறுமைப் பிரவேசம்

லீவை ஸ்போல்டிங் 1873 ம் ஆண்டு ஜூன் மாதம் 18 ம் திகதி மறுமைக்குள் பிரவேசித்தார். 1873 ம் ஆண்டு உடுவிலில் பணியாற்ற வந்த இம் மகான் ஒரு முறைதான் (1844) அமெரிக்காவுக்குச் சென்றார். மேரி ஸ்போல்டிங் அம்மையார் மேலும் ஒரு வருடம் உடுவிலில் வாழ்ந்து பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்.

இன்று வட்டுக்கோட்டையில் உள்ள இல்லம் இவருடைய பெயரைத் தாங்கி நிற்கின்றது. அவர் இயற்றிய நூல்களும் பாடல்களும் உடுவில் மகளிர் கல்லூரியும் அவரின் தூய வாழ்வினை நமக்கு ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கும்.

---

## திருவும் அருள்திருவும்



அருள்திரு: புதிய வருடத்தில் என்னென்வற்றை விட்டு விடத் திர்மானித்து விட்டீர்கள்?

திரு: ஷெல் அடியால் வீட்டையும் வளவையும் தான் விட வேண்டியிருக்கிறது.

---

## 59 வது ஆண்டு நிறைவு விழா

மருதனார்மடம் உவில்லியம் மேதர் பெண்கள் நிலையத்தினுடைய 59 வது ஆண்டு நன்றி செலுத்தும் ஆராதனை வளாக சிற்றாலயத்திலே 05 - 02 - 2000 அன்று சனிக்கிழமை காலை 9 00 மணிக்கு யாழ் பல்கலைக் கழக குடும்பத்தினரால் சிறப்பாக நடாத்தப்பட்டது. ஆராதனை யாழ்ப்பாண மறைமாவட்ட பேராயர் கலாநிதி எஸ் ஜெப நேசன் அவர்களுடைய ஜெபத்துடனும் இறையாசியுடனும் நிறைவு பெற்றது.

ஆராதனையைத் தொடர்ந்து தேனீர் விருந்தும் அதனைத் தொடர்ந்து மரம் நாட்டு விழாவும் நடைபெற்றது. தென்னிந்திய திருச்சபை பேராயர் சு ஜெபநேசன் அவர்களும், அங்கிலிக்கன் சபை குரு முதல்வர் வண S.P நேசக்குமார் அவர்களும் மெதடிஸ்த சபையைச் சேர்ந்த பிரதிநிதியும் மரங்களை நாட்டினார்கள். அதனைத் தொடர்ந்து விற்பனை விழாவும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இறுதியில் மதியபோசனத்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன

இந் நிலையம் உடுவில் மகளிர் கல்லூரியின் கடைசி மிஷனரி அதிபரான செல்வி லூலு டில் வோல்ட்டர் மற்றும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் கலாநிதி செல்வி தில்லையம்பலம் அவர்களாலும் வேம்படி மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் செல்வி மேபல் தம்பையா அவர்களாலும், உடுவில் மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி S S சோமசுந்தரம் அவர்களாலும் வளர்க்கப்பட்டது. தற்போது உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் கலாநிதி செல்வி C V செல்லையா அவர்களாலும் வழிநடத்தப்படுகின்றது. இந்நிலையில் கடந்த 59 ஆண்டுகள் திருச்சபையின் ஒன்றிப்புக்கு பெரும் பணி ஆற்றியுள்ளது. மெதடிஸ்த, அங்கிலிக்கன், தென் இந்திய திருச்சபை மக்களும் குருமாரும் அநேகர் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

## திருமணம்

எமது திருச்சபையைச் சேர்ந்த திரு. திருமதி ஆதர் (Arthur) குலேந்திரன் அவர்களின் மகன் சஞ்ஜீவ் குலேந்திரனுக்கும் அவுஸ்திரேலியாவில் வசிப்பவர்களுமான திரு திருமதி ஆசிர்வாத தேவசகாயம் அவர்களின் மகள் தர்சினி தேவசகாயத்திற்கும் திருமண ஆசிர்வாதம் ஆராதனை (27 - 12 - 1999) மாலை 5 . 30 மணிக்கு வெள்ளவத்தை தென் இந்திய திருச்சபையில் சிறப்பாக நடைபெற்றது, பி ஆர் நவேந்திர அனுகூலனும் வண கலாநிதி D S தியாகராஜா அவர்களும் இணைந்து இவ் ஆராதனையை நடாத்தினார்கள்,

ஏழாலை தெற்கு திருச்சபையைச் சேர்ந்தவர்களும், தற்பொழுது கொழும்பு திருச்சபையைச் சேர்ந்தவர்களுமான திரு திருமதி M ஜீவகாந்தி அவர்களின் மகன் ஜீவகுமாரன் ஜீவகாந்திக்கும், பண்டத்தரிப்பு திருச்சபையைச் சேர்ந்த திரு திருமதி P E தனராஜசிங்கத்தின் மகள் ஈவிலின் சுகந்தினி தனராஜசிங்கத்திற்கும். பரிசுத்த விவாகம் (10 - 01 - 2000) மாலை 5 00 மணிக்கு வெள்ளவத்தை தென்னிந்திய திருச்சபையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. Homily இலங்கை தேசிய கிறிஸ்தவ சங்கப் பொது செயலாளர் வண எபநேசர் யோசெவ் வழங்கினார்.

நவாலி சபையைச் சேர்ந்த திரு திருமதி S K யேசுதாஸன் அவர்களின் மகன் றொபேட் சுரேஸ்குமார் யேசுதாஸன் அவர்களுக்கும் [illegible] சேர்ந்த கிறிஸ்மன் தர்ஷினி பக்கியம் அவர்களுக்கும் திருமண ஆசீர்வத ஆராதனை (26 - 01 - 2000) மாலை 5 00 மணிக்கு வெள்ளவத்தை தென்னிந்திய திருச்சபையில் சிறப்பாக நடைபெற்றது. Homily வண T ஜொய்சந்திரன் (வவுனியா CSI போதகர்) வழங்கினார்.

## தாரகை ஒளி

நல்லது செய்ய நினைத்திடும் யாரும், தாங்கள் பாதையில் தட்டுப்படும் தடைக்கற்களை மற்றவர்கள் நீக்கி உதவுவார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது.

அறிஞர் அண்ணா

## யாழ்ப்பாணக்கல்லூரி புதிய அதிபர்

இரண்டாயிரம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ம் திகதி யாழ்ப்பாணக்கல்லூரியின் புதிய அதிபராக வண அன்ரனி அரியரத்தின போல் பதவி ஏற்கின்றார். யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னோடியான வட்டுக்கோட்டை செமினரி 1823 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடக்கியவர்கள் அதனது முதலாவது நோக்கமாக குறிப்பட்டது, சுதேச பிரசங்கி மாருக்கு ஆங்கிலத்தில் நல்ல அறிவு வழங்குவது என்பதாகும். ஆரம்பத்தில் இருந்து அறிவும் ஆற்றலும் கொண்ட கிறிஸ்தவ பிரசங்கிமாரை வட்டுக்கோட்டை செமினரியும் யாழ்ப்பாணக்கல்லூரியும் உருவாக்கி வந்தன. T P ஹன்ட், ஜெ எல் கிறிஸ்மஸ் சம்பியன், பிறேக்கன் ரிச், போன்றவர்கள் மிஷனரிமாரின் எதிர்பார்ப்பினை நிறைவேற்றினார்கள்.

இந்தப்பணி தொடர்ந்து நடைபெறுகின்றது. இன்று தென் இந்திய திருச்சபையில் மட்டுமின்றி கத்தோலிக்க, அங்கிலிக்கன், மெதடிஸ்த, அசம்பிலி ஒப் கோட் ஆகிய திருச்சபைகளிலும் யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்று அரங்கேறிய குருமார் மிகுந்த சிறப்புடன் பணியாற்றி வருகின்றனர்.

வட்டுக்கோட்டை செமினரி எச் ஆர் ஹொாஸிங்டன் காலத்தில் ஒரு சிறந்த பல்கலைக்கழகமாக உருவெடுத்தது. 1855 இல் வட்டுக்கோட்டையில் கிறிஸ்தவ பண்புகள் குன்றி வருவதை காரணமாகக் கொண்டு. அமெரிக்கன் மிஷனரிமார் அதனை மூடிவிட்டனர். பின்னர் கல்லூரியின் தேவையை. உணர்ந்து வணக்கத்திற்குரிய ஈ. பீ. ஹெஸ்டிங்ஸ் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. வண ஈ. பி. ஹெஸ்டிங்ஸ் அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த குரோவோர் கிளீவ்லன்டின் மைத்துனர் ஆவார்.

யாழ்ப்பாணக்கல்லூரியை வழி நடத்திய அமெரிக்க போதகர்மார், கிறிஸ்தவ மதகுருமார்களுக்கு ஆங்கில கல்வி அளித்தல் என்ற நோக்கத்தை எப்போதும் காப்பாற்றி வந்தார்கள்.

இன்று நாட்டின் பல்வேறு மாற்றங்களால் யாழ்ப்பாணத் கல்லூரி சற்று தேக்க நிலை அடைந்திருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். யாழ்ப்பாணக்கல்லூரி பழைய மாணவர்களும் கிறிஸ்தவ சமூதாயமும் தமிழ் மக்களும் புதிய அதிபரிடமிருந்தும் துணை அதிபரிடமிருந்தும் பலவற்றை எதிர்பார்த்து நிற்கின்றனர். சிறந்த கிறிஸ்தவ கோட்பாடுகளின்படி ஆசிரியர்களும் மாணவர்களும் நடத்தப்படவேண்டும் என்றும், கல்வியிலும் கலைகளிலும் கல்லூரி சிறப்புற வேண்டுமென்றும். மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றனர். இதனை யாழ்ப்பாணக் கல்லூரியை பொறுப்பெடுப்பவர்கள் செய்து முடிப்பார்கள் என்று நம் திடமாக நம்புகின்றோம்.

அமெரிக்காவில் இருந்து ஆறாய் பாய்ந்து வந்த அன்பு வெள்ளத்தின் பெருமையை யாழ்ப்பாணக் கல்லூரி தொடர்ந்து பறைசாற்றிக் கொண்டிருக்க வேண்டுமென்பதே எமது ஆவல்.

# கிருஷ்ணபிள்ளையும பவுலும்

சகோ எஸ். ஜோசுவா

தமிழ் வழிகிறிஸ்தவம் காணமுற்பட்ட தமிழ்த் தலைவர்களில் திருநெல்வேலி எச். ஏ. கிருஷ்ணபிள்ளை ஒரு தனியான இடத்தைப் பிடித்துள்ளார். கிருஷ்ணபிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது நூல்களையும் வாசிக்கும் போது அவரது கிறிஸ்தவ வாழ்வும் பணியும். அப்போஸ்தலனாகிய பவுலின் கிறிஸ்தவ வாழ்வோடும் பணியோடும் ஒத்திருக்கின்றன. பவுலின் யூதசமய வைராக்கியம் அவர் யூதமொழியில் வைத்திருந்த தணியாதபற்று தமது சமய வைராக்கியத்தால் கிறிஸ்தவர்களை பல முறை ஒடுக்கிய நிலை. பின்பு கிறிஸ்துவால் ஆட்கொள்ளப்பட்ட பின்பு அவர் எல்லாவற்றையும் விட்டுவிட்டு கிறிஸ்துவுக்காய் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த நிலை கிறிஷ்ணபிள்ளை அவர்களின் வாழ்விலும் காணப்படுகின்றதை அறியலாம்.

1827 ம் ஆண்டு ஏப்ரல் 23 ம் திகதி பாளயங்கோட்டை கரையிருப்பு என்ற கிராமத்தில் சங்கர நாராயணபிள்ளைக்கும் தெய்வநாயகி அம்மையாருக்கும் மூத்த மகனாக பிறந்த கிருஷ்ணபிள்ளை தமது தாய்ச்சமயமாகிய வைணவ சமயத்தில் மிகவும் பக்தியுடையவராக வளர்க்கப்பட்டார். அக்காலத்தில் தமிழ்த்துறையில் பிரபல்யமான திருப்பாற்கடனாத கவிராயரிடம் தமிழ்க் கல்வி கற்ற கிருஷ்ணபிள்ளை தமிழ் மொழியில் கவி இயற்றும் வரத்தினைப் பெற்றுக்கொண்டார். அக்காலத்தில் மேனாட்டில் இருந்து வந்த மிஷனரிமாரின் கிறிஸ்தவ மதபரம்பல் திருநெல்வேலி மாவட்டத்தில் அதிகமாக இருந்தது. வாலிபரான கிருஷ்ணபிள்ளையும் அவரது நண்பர்களும் இக் கிறிஸ்தவ சமயத்திற்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் எதிர்ப்பை தெரிவித்து வந்தார்கள். மிஷனரிமார் குடிப்பதற்கென்று வெட்டி வைத்திருந்த கிணற்றில் உப்பு மூட்டையை தூக்கி போட்டார்கள். இக் காலத்தில் இவரது தம்பியான முத்தையா கிருஷ்ணபிள்ளை கிறிஸ்தவசமயத்திற்கு மதம் மாறியதை கேள்விப்பட்ட கிருஷ்ணபிள்ளை மிகவும் ஆத்திரங்கொண்டு தன் தம்பியை குடும்பத்தில் இருந்து ஒதுக்கி வைத்தார். கிறிஸ்தவ மிஷனரிமாருக்கும் பெரும் எதிர்ப்பை காட்டி வந்தார். தம்மைத் துன்புறுத்துகிறவர்களையே அதிகமாக நேசித்து அணைத்து கொள்ளும் நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து கிருஷ்ண பிள்ளை அவர்களையும் ஒரு நாள் தடுத்தாட் கொண்டார்



யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய பேர்சிவல் மிஷனரி எழுதிய அருளவதாரம் என்ற துண்டு பிரசுரத்தை ஏற்கனவே வாசித்திருந்த கிருஷ்ணபிள்ளை அவர்கள், சாயர்புரத்தில் உள்ள திருமறைக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக கடமையாற்றச் சென்றார். அங்கு தனக்கு யாரும் இயேசுவை பற்றி கூறிவிடக் கூடாது என்று கடுமையான எச்சரிக்கை விடுத்தும் இருந்தார். ஆனால் ஒருநாள் அவர் புதிய ஏற்பாட்டு பகுதியை வாசித்தபோது ஆண்டவர் தம்மோடு பேசியதாக உணர்ந்து கொண்டார். கிறிஸ்துவால் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் திருமுழுக்கு எடுத்துக் கொண்டார்.

வைணவ சமயத்தில் சிறந்த பக்திமானாக காணப்பட்ட கிருஷ்ணபிள்ளை கிறிஸ்தவ சமயத்திற்கு மதம் மாறினார் என்றதை கேள்விப்பட்ட குடும்பத்தவரும் ஊராரும் கடுமையாக எதிர்த்தார்கள். கிருஷ்ணபிள்ளையின் மனைவியும் தாயாரும் அவரை வீட்டிலிருந்து ஒதுக்கி வைத்தார்கள் ஆனாலும் தன்னை ஆட்கொண்ட கடவுளின் கரத்தில் இருந்து அவர் விலகவில்லை.

எனக்கு லாபமாய் இருந்தவைகள் எவைகளோ அவைகளை கிறிஸ்துவுக்காய் அற்பமாய் எண்ணி அவைகளை ஒதுக்கி விட்டேன்'' என்ற பவுலடிகளாரின் வார்த்தைக்கு அமைய கிருஷ்ணபிள்ளையும் தனக்கு வந்த எல்லா எதிர்ப்புகளையும் சோதனைகளையும் தாங்கி கொண்டார். ஏனைய அப்போஸ்தலரை விட பவுலடிகளாரின் மன மாற்ற திருப்பணியும் வித்தியாசமானதாக இருந்ததோ அவ்வண்ணமே கிருஷ்ண பிள்ளையின் மனமாற்றமும் அமைந்திருந்தது.

1858 ம் ஆண்டு திருமுழுக்குப் பெற்ற கிருஷ்ணபிள்ளை அவர்கள் தமிழ் கிறிஸ்தவ உலகிற்கு படைத்த இலக்கியங்கள் பவுலடிகளாரின் நிருபங்களை போல படித்து கடைபிடிக்க வேண்டியவைகள்; அவர் இயற்றிய நூல்களான, இலக்கிய சூடாமணி கிருஷ்ணபிள்ளை வரலாறு, இரட்சண்ணிய யாத்திரிகம், இரட்சண்ணிய சமய நிர்ணயம், இரட்சண்ணிய மனோகாம், இரட்சன்னிய நவநீதம், போன்ற நூல்கள் அவர் தமிழ் கிறிஸ்தவ உலகிற்கு தந்த சொத்துக்களாகும். அவரது பணிகளையும் வாழ்வையும் குறித்து ஒவ்வொரு வருடமும் 29 - 1 - 2000 இறையியல் கல்லூரியினரால் நடத்தப்படும் நினைவுரைகள் போற்றப்பட வேண்டியவையாகும்.

## திரு. Thomas Page Hunt அவர்களின் பிறந்த நாள் நன்றி செலுத்தும் வழிபாடு

சாவகச்சேரி திருச்சபையின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான Mr Thomas Page Hunt தன்னுடைய 97 வது வயதை பூர்த்தி செய்து (15 - 01 - 1903) 98 வது வயதில் காலடி எடுத்து வைப்பதை நினைவு கூர்ந்து 15-01-2000 அன்று திருச்சபை மண்டபத்தில் கடவுளுக்கு நன்றி செலுத்தும் வழிபாடு நடைபெற்றது.

இவ் வாராதனை சபை ஊழியன் அருட்திரு T. H வசந்தகுமார் அவர்களினால் வழிநடத்தப்பட்து. இவ் வழிபாட்டில் பங்குபற்றிய சாவகச்சேரி திருச்சபை மக்களும் சாவகச்சேரியில் வாழ்கின்ற பெரியோர்களும் இறை அருளால் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்க என திரு T .P Hunt அவர்களை வாழ்த்திச் சென்றார்கள்.

## நன்றி நவிலல்

### ஏஞ்சல் நடராஜா

அருட்திரு திருமதி ஜீ நடராஜா ஆகியோரின் அன்பு மகள்ஏஞ்சல் (5 வயது) 31 - 01 - 2000 அன்று யாழ் வைத்திய சாலையில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அடக்க ஆராதனை 01 - 02 - 2000 அன்று நுணாவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று வட்டுக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஆராதனையை நடாத்திய பேராயர், குருமார், மற்றும் ஆராதனையிலும். சேமக்காலை ஆராதனையிலும் கலந்து கொண்டவர்கள் எல்லோருக்கும் எமது நன்றிகளை தெரிவிக்கிறோம்.

அருட்திரு ஜீ நடராஜா
திருமதி மாலினி
பென்ஜமின், நோவா

# The Spirit of Jaffna College

On Tuesday the 21st February Rev. Anthony Ariaratnam Paul will be installed as Principal Jaffna College. He had been serving as Co-Vice Principal from 1994 and as Vice Principal from 1999. On the same day Mr. N. A. Vimalendran will assume duties as Vice Principal. May God almighty shower his blessings on the College and the new administrators.

The Collegiate institution at Vaddukoddai was established by the Congregational missionaries of America in 1823.

The founders laid down the following as its first objective

"A leading objective will be to give native youth of good promise a thorough knowledge of English language. The great reason for this is that it will open to them the treasures of European Science and Literature and bring fully before the mind the evidences of Christianity. A knowledge of English Language especially for those designed for native preachers is in this point of view important almost beyond belief"

During the past 177 years, Jaffna College underwent many experiences — joy, success achievement and also disappointment, failure and anguish. But Jaffna College is a movement whose distinctive features, were strong religious conviction academic excellence, firm and steadfast on big issues, flexible and sportive on small matters, concern for the fellow citizens and high sense of humour. With these traits, Jaffna College was able to surmount all difficulties.

We sincerely hope that Rev. A. A. Paul and Mr. N. A. Vimalendran will always remember the dreams of the founders and uphold the noble traditions.

The Alumni of the College which is now spread all over the world, the members of the Board of Trustees who had been most kind and forbearing, the parents and the Tamil Community are greatly concerned about the future of this institution.

The question that is uppermost in their minds is "Will they salvage the institution?" Will Jaffna College once again become "the veritable queen of educational institutions of Ceylon"?

They fondly ask.

So with a perfect awareness of all our shortcomings with a sense of utter humility and with the utmost reverence to the selfless missionaries who toiled in this land, we commend the following words of Tenryson to the young men in whom we have put our trust

"Though the path may be dark as night, Courage brother do not slumble, Trust in the Lord and do the right."

Bp. S. J.

(Continuation from last Issue)

# Tamil Wisdom Proverbs on Exertion...

ஒரு குருவி இரை எடுக்க ஒன்பது குருவி வாய் திறக்க,

One bird brings the food, and nine open their mouths for it.

The head of a family does not enjoy what he earns.

கடன்பட்டு உடன்பட்டு, அம்மை கும்பிட, நீ யார் கூத்தி விழுந்து கும்பிட

In order to worship the Goddess, I have borrowed money and given bonds; but whose concubine are you, to bow down here and worship the Goddess?

One profits by another's labour.

Used by a selfish mother in-law, when the latter attempts to profit by the former's economy.

"One soweth and another reapeth"

காத்திருந்தவன் பெண் சாதியை, நேற்று வந்தவன் அடித்துக்கொண்டு போனானாம்

He took care of the girl (in the hope of marrying her) but a stranger who arrived yesterday came and took her away for himself.

கலமாவு இடித்தவள் பாவி, சப்பி இடித்தவள் புண்ணியவதியா?

Is she who pounded a kalam of flour a sinner, while she who pounded the grit is virtuous?

Used when one person gets credit for a piece of work, nearly all of which has been done by another e. g. A daughter - in - law has had all the hard labour of preparing for an approaching wedding, but just at the last, the daughter of the house gives a finishing stroke to the preparations, and her mother honours her as if she had done all the work.

"God heals and the physician hath the thanks."

கறையான் புற்றில் பாம்பு குடிகொண்டதுபோல்.

Like a snake making its home in the ant - hill of the white ants.

"The sparrow builds in the martin's nest."

நான் தேடிப் பச்சைபோட, நாரிகள் எல்லாம் வந்தார்கள் தெய்வம் ஆட

I have procured and arranged these plants and trees and then all these women come to dance for the goddess!

"Fools lade out all the water, and wise men take the fish"

வெல்லம் தின்கிறவன் ஒருவன், விரலைச் சூப்புகிறவன் ஒருவன்.

One eats the sugar; another licks his fingers.

உண்பான் தின்பான் பைராகி குத்துக்கு நிற்பான் வீரமுஷ்டி.

The mendicant fares sumptuously at my master's table but it I. Veeramusti that must bear his blows and hard treatment:

Used by a hard working day labourer against an indulged fellow labourer.

அகல உழுகிறதைவிட, ஆழ உழுகிறது மேல்,

Better to plough deep than wide.

It you begin a work, do it thoroughly and not superficially.

உளை (சேறு) வழியும், அடைமழையும், பொதி எருதும் தனியுமாய் அலைகிறது போல்.

Like going single - handed in a road full of quagmires in unceasing rain with pack bullocks.

A simile expressing the very highest degree of discomfort for very small profit. The driver of pack - bullocks gets small wages for all the pains he takes.

எள்ளுத்தான் எண்ணெய்க்கு உலருகிறது (காய்கிறது) எலிப் புழுக்கை என்னத்துக்கு உலருகிறது?

Sesamum - seed is dried for oil, but why dry rats' dung.

Said about a person who loiters about with others who are hard at work.

ஒண்டிக்காரன் பிழைப்பும், வண்டிக்காரன் பிழைப்பும் ஒன்று

A single man's life and cart - driver's are alike as Both are ever on the move and have no comforts.

நாய்வேஷம் போட்டால், குலைக்க வேண்டும்

If you agree to personate a dog, you must bark.

Anything once begun should be done thoroughly. (The proverb implies that the work in question was begun with some unwillingness.)

## Ponniah Joseph....

overlook his birth place, Atchuvely. He served as committee member of the church from 1978-1989, during which time was living in Atchuvely The Dicesan Council of the C S I. was another body in which he served in various capacities He was the Auditor of the Navajeevanam (orphanage and rehabilitation centre). He was also in the Pastors' Pension Committee.

But for slight eye ailment which troubled him a little, he was generally healthy. In fact, he was well informed on matters of health. he would give me a lot of very useful advice for my own health problems. He was being well looked after by his children and he was a happy grandfather with eight lovely grand children. He could have very well lived for many, many more years. Men of his calibre are a rare breed, and they are really the salt of the earth. The world will be the poorer for the loss such men.

"Not they that are merely snatched away by the Lord of Death. But only those that pass into the heaven of Glory Having given of their best to mankind. It is they who are truly blessed"

Judged by this criterion, Mr Thambiratnam was a blessed soul indeed. He did not live for himself alone. He lived for the sake of others also.

The children deeply mourn the loss of their beloved father. To me, his loss is a persona one as I have lost an intimate friend and close associate for full fifty years.

May his sould find eternal peace and happiness in the hands of the Lord!

A Gunanayagam
Colombo.
December 1999

# OBITUARY

## Mary Amirthamma Bacus

We are sorry to record the death of Mary Ammirthammah Bacus (Mary Acca) formar Head Mistress, Primary section Methodist Girls' High School,Point Pedro, which took place on Saturday the 29th January 2000. The funeral took place on the following day at her residence at Point Pedro.

## A. P Gunaratnam

Death occurred on Saturday the 29th January 2000 of Mr. A. P Gunaratnam, retired Post Master The funeral took place at his residence at Shwartz lane, Jaffna, on 31st January 2000, and the remains were then removed to Kottady Cemetery for interment. He leves behind besides his wife Ruby, Aruchina Dilon, and Rienzee, (sons).

## Sabapathipillai Samuel Selvarajh

Passed away on 2oth January 2000 (6031, Christina Road Richmond BC,V7C, 2P7 Canada) Retired Manager-Bank of Celyon beloved husband of Lily Joseph, son of late Mr. & Mrs Saravanamuthu Sabapathypillai of ChavaKachcheri. Father of Chrisilda Anandajeyan (Ohio. U S. A.) Reginold Selvendra (UK) Noel Shylendra (Vancouver Canada) Darin Subendra (U K), Cliff Nirendra (Sri Lanka). Father in law of Dr. C. Anandajeyan (U. S. A). Brother of Daisy Rajendra late George, Jeyam, Kulam, late Bala, Rajendra late Rani, Sakunthala and Vim.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka: News Paper Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press, Diocesan Complex Vaddukoddai on Friday the of 11th February 2000 published by Rev G. Nadaraja Diocesan office, Vaddukoddai.